உ

சிவமயம்.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

சைவ சித்தாந்தச் செல்வராகிய

ஸ்ரீமத் சொக்கலிங்க ஐயா அவர்கள் சரித்திரம்.

இஃது

காரைக்குடி
ராம. உ. இராமசாமிச் செட்டியார் அவர்களால்
எழுதப்பெற்று

சிதம்பரம்
ஸ்ரீ மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலைத்
தருமபரிபாலகர்களால்

சென்னை
சோல்டன் கம்பெனியில் பதிப்பிக்கப்பெற்றது.

யுவ௵ ஐப்பசிமீ

1935.

W 1022

சைவ சித்தாந்தச் செல்வர், சொக்கலிங்க ஐயா அவர்கள்.

சிவமயம்.

கணபதிதுணை.

முகவுரை.

ஸ்ரீமத். சொக்கலிங்க ஐயா அவர்கள் சுத்தாத்துவித சைவ சித்தாந்தச் செந்நெறிச் செல்வராய், அந்நெறிக்கண் உறைத்து நின்றும், அந்நெறியே முத்திநெறி எனப் பிறர்க்குப் போதித்தும், அந்நெறி மேன்மேலும் ஓங்கிவளர்ந்து, இவ்வுலகம் உய்திபெற வேண்டும் என்னும் நன்னோக்கத்தானே அது விருத்தியாதற்கு இன்றியமையாத "மெய்கண்டசித்தாந்த வித்தியாசாலை," அமைத்தும், மற்றுஞ் சிவபுண்ணியங்களைச் செவ்விது செய்தும், செய்வித்தும், உபகரித்த உத்தம சிவ புண்ணியசீலராவர். ஆதலின் அவர்கள் சரித்திரம் உலகத்தில் விளங்கவேண்டுவது ஆவசியகமெனப் பல பெரியோர்களும், சிவநேசர் திருக்கூட்டத்தார்களும், பிற அன்பர்களும் மிக்க விருப்புடன் ஐயா அவர்களுடைய மாணாக்கர்களிடம் தெரிவித்தார்கள்.

அவ்வின்ப மொழியானது இயல்பாகவே ஐயா அவர்களின் சரித்திரத்தை எழுதவேண்டும் என்னுங் கருத்துக்கொண்டிருந்த மாணாக்கர்களின் எண்ணத்தை விரைந்து ஊக்க அவர்கள் யாவரும் ஒருங்கு கூடிச் சிற்றறிவினராகிய

என்னையுந் தம்முள் ஒருவனாக மதித்து "இப்பணியை நீயே செய்க" என்று கட்டளையிட, யாவரும் ஒருப் பட்டுக்கூறும் அக்கட்டளையை மறுக்கவொண்ணாமலும், குருவைத் துதித்தல் உத்தம சிவ புண்ணியமெனக் கருதி யும் அதனை மேற்கொண்டு ஐயா அவர்கள் நேரில் சொல் லக் கேட்டவைகளையும், நேரில் அறிந்தவைகளையும், ஐயா அவர்களுடைய புத்திரர், மாணவர், நண்பர், முதலியோர் சொல்லக் கேட்டவைகளையும், ஒரு கோவைப்படுத்தி இச் சரித்திரம் எழுதலாயிற்று.

இச்சரித்திரத்திற் குறைபாடுகளிருப்பினும் பெரியார் சரித்திரமானபடியால் நீரைப்பிரித்துப் பாலைக்கொள்ளும் அன்னம்போல் குற்றங்களைந்து குணமளைந்து பாராட்டும் வண்ணம் உத்தமர்களைப் பிரார்த்திக்கின்றேன்.

இச்சரித்திரத்தில் யாதேனும் விஷயங்கள் விட்டிருந்து சேர்க்க வேண்டுமாயின், அறிந்தோர் தெரிவித்தால் மறு பதிப்பில் சேர்த்து வெளியிடலாம்.

சுபம்!

காரைக்குடி
புவ ஹூ ஐப்பசிமீ

இங்ஙனம்,
ராம. உ. இராமசாமி.

உ

சிவமயம்.

உலகம்பட்டி

சித்தாந்த சைவ நிலயம்

ஸ்ரீலஸ்ரீ இலக்குமண சுவாமி அவர்கள்

மதிப்புரை

நீர்வளம், நிலவளம், பொருள்வளம் நிறைந்த காரையம்பதியில் தனவைசியமரபில் இற்றைக்கு எழுபத்தெட்டு ஆண்டுகட்குமுன் திருவவதாரம் செய்து தமது இளம்பருவத்திற்றானே இலக்கணவிலக்கியம், சித்தாந்த சாத்திர முதலிய கருவிநூல் அறிவுநூல்களை உத்தமாசிரியர் முன் ஐயம் திரிபறக்கற்றுத்தெளிந்து புலவர் திலகமென யாவரானும் மதிக்கப்பெற்று திருப்புத்தூர்த்தலபுராணம் ஆதிய பலதல புராணங்களையும், இறைவன்மீதும், இறைவன் அடியார்மீதும் பலபிரபந்தங்களையும் பாடியும், பலகட்டுரை நூல்களியற்றியும், சிவாகம விதிப்படி பெருமைமிக்க சிவாசாரியரிடத்தில் சமயவிசேட நிருவாண தீக்கைகள் பெற்று சிவபூசை சிவாலய சேவைகளையிடையறாது செய்தும், தம்மை வந்தடைந்த நன்மாணாக்கர்களுக்கு அவரவர் மதிநுட்பம் நோக்கி கருவிநூல், அறிவிநூல்களை மனத்தெளிவுறப்போதித்தும், பெரிய அவைக்களங்களில் அரியேறு போன்று வீற்றிருந்து சைவ வீரத்துடன் பிரசங்கமாரி பொழிந்து உலகாயதம், பாஞ்சராத்திரம், ஏகான்மவாதம் முதலிய புறச்சமயங்களைக்கண்டித்து சிவமே பரம்பொருள் என நாட்டியும், சமய அரசாய் விளங்கும் நம் சைவத்தை யாங்கணும் பரவச்செய்தற் பொருட்டு சிதம்பரத்தில் பொய்

மதிப்புரை.

கண்டகன்ற மெய்கண்டார் பெயரால் ஓர் வித்தியாசாலை நிறுவியும், என்றும் மாறாத சிவ வேடப் பொலிவுடன் சித்தாந்த ஞானச் சிவானுபூதிச்செல்வராய் நிலவியிருந்து பிரமோதூதவருடத்தில் சுத்த சாட்குண்ணிய பரமபதி யாகிய சிவபரஞ்சுடரின் திருவடிப் பேறெய்திய தவப் பெரியாராகிய ஸ்ரீலஸ்ரீ, சொக்கலிங்க ஐயா அவர்களின் திவ்விய சரிதத்தை ஐயா அவர்களின் மாணுக்கருள் தலைசிறந்து விளங்குபவராயும், கல்விச்செல்வம் பொருட் செல்வம் நிறையப்பெற்றவராயும், அதிவிரைவில் செய்யுளி யற்றும் புலமைத் திறம்வாய்க்கப் பெற்றவராயும், சிவபத்தி, அடியார்பத்தி, குருபத்தியிற் சிறந்து விளங்குபவராயும், காரையம்பதிவாசராயும் உள்ள திருவாளர் ராம. உ. இராம சாமிச்செட்டியாரவர்கள் இனிய செந்தமிழ் வசன நடை யில் எழுதியுள்ளார்கள். இச்சரிதத்திற்கண்ட நிகழ்ச்சி களுள் ஒன்றேனும் புனைந்துரையன்று. இத்தவப்பெரி யார் பெருமையை இச்சரிதத்தானும், இதன் பிற்பகுதியி லுள்ள இரங்கற்பாக்கள், அனுதாப உரைகளானும் நன் குணரலாகும்.

"தேசிகர் தம்மைச் சிவநேசர் தம்மையும்
ஈசனெனவே உளத்துளெண்"

எனச் சைவசமய நெறியிற் கூறியாங்கு சிவனடியவரைச் சிவனெனவேகண்டு வழிபடவேண்டுவது மரபாகலின் இப் பெரியார் சரிதத்தைச் சிவசரிதமாகவேயெண்ணி சிவநேசச் செல்வரனைவரும் ஏற்று அன்போடுபடித்துப் பாராட்டி இறைவன் அருட்பேற்றிற்குரியராகி இன்புற்று வாழ்வா ராக.

உ

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத்
தமிழ்ச் சொற் பொழிவாளர்
மகிபாலன்பட்டி
**பண்டிதமணி. உயர்திரு. மு. கதிரேசச்
செட்டியாரவர்கள்**
இயற்றியது.

பன்னிரு சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

*தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னை
யுணருஞ் சைவ நெறி
சார்ந்து வாழ்ந்த பெருந்தகையான் தமிழ்நூல்
பலவுந் தகவுணர்ந்தோன்
செம்மை நலஞ்சால் காரைநகர்த் திருவார்
தனவை சியமரபு
திகழத் தோன்றிச் சிவபதமே சிரத்திற்
கணியாப் பூண்டவன்சீர்
மும்மை யுலகும் புகழ்ந்தேத்து முதியோன்
எங்கள் சொக்கலிங்க
முனிவன் சரிதக் கடலினிறை முகந்து
தெளித்தான் யாவனெனின்
மெய்ம்மை வழுவா நெறிநின்று விமலன்
அடிக்கட் பத்திமிக
மேவும் இராம சாமியெனும் விநய
குணஞ்சால் நல்லோனே.*

தேவகோட்டை, சிவாகம சங்கம்

திரு. பொ. முத்தைய பிள்ளை அவர்கள்.

இயற்றியது.

பூவுலகில் மேலாந்தென் பாண்டி நாட்டில்
பொருளோங்கு காரைமா நகரின் கண்ணே
மேவுதன வணிகர்குல விளக்காய்த் தோன்றி
மிகுசைவ சித்தாந்த மெய்ம்மை தேறி
யாவுமாஞ் சிவனைமனத் திருத்திப் பூசித்
தெப்பொழுதுந் தனையடுத்த அன்பர் யார்க்கும்
ஆவலுடன் நூல்கள்பல பாடஞ் சொல்லி
அருந்தமிழுஞ் சைவமுமே லோங்கச் செய்த (க)

சொக்கலிங்க அய்யாவின் சரிதந் தன்னைத்
தோற்றமுதல் முறைப்படுத்தித் தூய வாக்கால்
மக்களெல்லாம் உய்யும்வணம் வசன மாக
வழங்கினான் அய்யாவுக் கணுக்க ராகித்
தக்கமரி யாதையுடன் தொண்டு செய்து
சாத்திரங்கள் பலகேட்டுச் சைவம் பேணி
மிக்கமகிழ் காரைவா ழிராம சாமி
மேலவனாந் தனவணிக மரபு ளோனே. (உ)

காரைக்குடி

சித்தாந்த சைவப் பெருஞ்செல்வர்

ஸ்ரீமத். ராம. சொ. சொக்கலிங்கச் செட்டியாரவர்கள்

மாணாக்கருள் ஒருவரும் தேவகோட்டை

சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமையாசிரியருமாகிய

சொ. வேலுச்சாமிக் கவிராயர் அவர்கள்

இயற்றியது.

சீராரும் பாண்டிவள நாட்டின் மேன்மை
திகழ்காரை மாநகரின் வடபாலிற்சேர்